லங்கா சதொச LANKA SATHOSA

# வெற்றிடங்கள்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிடெட்டின் நோக்கம்

நாடெங்கும் உள்ள சமூகங்களுக்கான தினசரி வாழ்வை சிறந்ததாக்குவது. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (SMEs) தங்களது வணிகங்களை வளர்த்துக் கொள்ள நம்பகமான மற்றும் சிக்கலற்ற தளத்தை வழங்குவதன் மூலம் அவற்றை ஆதரிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். அதேவேளையில், விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு இடையில் குறைந்தபட்ச தடைகளுடன் வலுவான மற்றும் நேரடி தொடர்புகளை உருவாக்குகிறோம். நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றை வழிகாட்டும் கொள்கைகளாகக் கொண்டு, எங்கள் பணியாளர்களும் அனைத்து பங்குதாரர்களும் ஒன்றிணைந்து வளர்ச்சி பெற்று வெற்றி அடையக்கூடிய ஆற்றல்மிக்க மற்றும் ஆதரவான பண்பாட்டை நாம் உருவாக்கி வளர்க்கிறோம்.

இலங்கை முழுவதும் உள்ள சமூகங்களுக்கு சேவை செய்வது, சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை (SMEs) ஆதரிப்பது மற்றும் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது என்ற எங்கள் நோக்கத்தில் பங்களிக்க, மேற்கூறிய பதவியில் இணைந்து லங்கா சதொச லிமிடெட் குடும்பத்தின் ஓர் அங்கமாக வர திறமையான நபர்களை நாங்கள் தேடுகிறோம்.

### 1. தலைமை நிறைவேற்று அதிகாரி

**பணிப் பொறுப்பு**

- லங்கா சதொச லிமிடெட்டை நிலையான வளர்ச்சி மற்றும் செயற்பாட்டு சிறப்பை நோக்கி வழிநடத்தும் தொலைநோக்கு தலைமையையும் மூலோபாய திசையையும் வழங்குதல்.
- நிறுவனத்தின் சில்லறை விற்பனை வலையமைப்பின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தை மேற்பார்வையிடுதல்.
- நிறுவனத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளை அடைய வர்த்தகத் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு கட்டமைப்புகளை உருவாக்கி, நடைமுறைப்படுத்தி, கண்காணித்தல்.
- திறமையான நிதி முகாமைத்துவம், செலவுக் கட்டுப்பாடு மற்றும் வருவாய் மேம்பாட்டு உத்திகள் மூலம் நிறுவனத்தின் செயல்திறனை உயர்த்துதல்.
- பணியாளர்களின் ஈடுபாடு, திறன் மேம்பாடு மற்றும் பாதுகாப்பான, உற்பத்தித்திறன் மிக்க பணிச்சூழலை உறுதிசெய்து, உயர் செயல்திறன் கொண்ட நிறுவனப் பண்பாட்டை வளர்த்தல்.
- அரசாங்கப் பங்குதாரர்கள், ஒழுங்குமுறை அமைப்புகள், வழங்குநர்கள் மற்றும் பரந்த சமூகத்துடன் வலுவான உறவுகளை உருவாக்கிப் பேணுதல்.
- அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு பொருந்தும் சட்டரீதியான தேவைகள், நல்லாட்சித் தரநிலைகள் மற்றும் அரசாங்கக் கொள்கைகளுடன் இணக்கத்தை உறுதிசெய்தல்.
- வாடிக்கையாளர் திருப்தியையும் சந்தைப் போட்டித்திறனையும் மேம்படுத்தும் வகையில் விரிவாக்கம், நவீனமயமாக்கல் மற்றும் சேவை மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை அடையாளம் காணுதல்.
- நிறுவன மாற்ற முயற்சிகளுக்கு தலைமை தாங்கி, சில்லறை விற்பனைச் செயற்பாடுகள், வழங்கல் சங்கிலி மற்றும் வாடிக்கையாளர் சேவைகளில் சிறந்த நடைமுறைகளை செயற்படுத்தல்.
- நிறுவனத்தின் செயல்திறன், நிதி நிலை மற்றும் மூலோபாய திசை குறித்து பணிப்பாளர் சபைக்கு அறிக்கையளித்து, சரியான நேரத்தில் பகுப்பாய்வுகளையும் பரிந்துரைகளையும் வழங்குதல்.
- பணிப்பாளர் சபையால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்**

**உள்ளக மற்றும் வெளி அபேட்சகர்களுக்கு (கீழுள்ள 1 அல்லது 2):**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம் அல்லது எந்தவொரு தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் வர்த்தக நிர்வாகம் அல்லது எந்தவொரு தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது முகாமைத்துவம்/ கணக்கியலில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் உயர் அங்கத்துவம்.

   மற்றும்

   முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம், அதில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.

2. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம் அல்லது எந்தவொரு தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம் அல்லது எந்தவொரு தொடர்புடைய துறையிலும் கலாநிதிப் பட்டம்.

   மற்றும்

   முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம், அதில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 45 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு:** அடிப்படைச் சம்பளம்: 250,000.00, வாழ்க்கைச் செலவு: 50,000.00, தொழில்முறை கொடுப்பனவு: 100,000.00, செயல்திறன் கொடுப்பனவு: 150,000.00, தொடர்பாடல் கொடுப்பனவு: 4,250.00 மற்றும் எரிபொருளுடன் (145 லீற்றர்) சேர்த்து நிறுவன வாகனம் ஒன்று வழங்கப்படும்.

**நியமனத்தின் தன்மை:** அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுக்கு EPF மற்றும் ETF இற்கான தகைமையுடன் வருடாந்தம் புதுப்பிக்கக் கூடியதாக ஐந்து (05) ஆண்டுகள் ஒப்பந்தம்.

### 2. பிரதிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு

**பணிப் பெறுப்பு**

- நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இடர் முகாமைத்துவ கட்டமைப்புடன் இணங்கி ஆண்டு உள்ளக கணக்காய்வு திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.
- நிதி, செயற்பாட்டு மற்றும் இணக்கப்பாட்டு செயல்முறைகளின் திறன், கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு ஏற்ப செயல்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்த சுயாதீன கணக்காய்வு மற்றும் மதிப்பாய்வுகளை மேற்கொள்ளல்.
- இடர்கள், கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் செயல்முறை மேம்பாட்டிற்கான பகுதிகளை அடையாளம் கண்டு, நிர்வாகத்திற்குச் செயல்படுத்தக்கூடிய பரிந்துரைகளை வழங்குதல்.
- விரிவான உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைத் தயாரிப்பதை மேற்பார்வையிட்டு, கணக்காய்வுக் குழு மற்றும் சிரேஷ்ட நிர்வாகத்திடம் கண்டறிதல்களை சமர்ப்பித்தல்.
- கணக்காய்வு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்து, தொடர்புடைய துறைகள் மேற்கொள்ளும் திருத்த நடவடிக்கைகளைப் பின்தொடர்ந்து மதிப்பாய்வு செய்தல்.
- முறையான மற்றும் வெளிப்படையான கணக்காய்வு செயல்முறைகள் மூலம் பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் உட்கட்டமைப்புக் கொள்கைகளுடன் இணக்கத்தை உறுதிப்படுத்துதல்.
- உயர்ந்த தொழில்முறைத் தரங்களைப் பேணவும், நிறுவனத்தின் நல்லாட்சியை மேம்படுத்தவும், உள்ளக கணக்காய்வு குழுவை வழிநடத்தி, பயிற்றுவித்து மற்றும் திறம்பட நிர்வகித்தல்.

**தகைமைகள்**

**உள்ளக மற்றும் வெளி அபேட்சகர்களுக்கு (கீழுள்ள 1 அல்லது 2):**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ நிதி முகாமைத்துவம்/ பொருளாதாரம்/ வர்த்தகத்தில் இளமாணிப் பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் 'முகாமைத்துவ தரத்தில்' குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம், அதில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. பதவியின் விடயப் பரப்புக்கு தொடர்புடைய (CIMA, ACCA, CA, CIA) அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை "பட்டய நிறுவன" அமைப்பு ஒன்றில் சக அங்கத்துவம் மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் 'முகாமைத்துவ தரத்தில்' குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம், அதில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு:** அடிப்படைச் சம்பளம்: 150,000.00, வாழ்க்கைச் செலவு: 25,000.00, தொழில்முறை கொடுப்பனவு: 75,000.00, செயல்திறன் கொடுப்பனவு: 100,000.00, போக்குவரத்துக் கொடுப்பனவு: 100,000.00, தொடர்பாடல் கொடுப்பனவு: 3,750.00 மற்றும் மாதம் ஒன்றுக்கு 135 லீற்றர் எரிபொருள் ஒதுக்கீட்டுக்கு உரித்தாகும்.

நியமனத்தின் தன்மை: EPF மற்றும் ETF இற்கான தகைமையுடன் வருடாந்தம் புதுப்பிக்கக் கூடியாதாக ஐந்து (05) ஆண்டுகள் ஒப்பந்தம்.

### 3. பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல்

**பணிப் பெறுப்பு**

- லங்கா சதொச லிமிடெட் நிறுவனத்தின் வர்த்த நோக்கங்களுடன் முழுமையாக ஒத்திசைவாக, வாடிக்கையாளர் சேர்த்தல், ஈடுபாடு மற்றும் நிலையான வருவாய் வளர்ச்சியை முன்னேற்றும் வகையில் மொத்த சந்தைப்படுத்தல் மூலோபாயத்தையும், விரிவான சந்தைப்படுத்தல் திட்டங்களையும் வடிவமைத்து, மேம்படுத்தி, நடைமுறைப்படுத்துதல்.
- லங்கா சதொச லிமிடெட் நிறுவனத்தின் சந்தை நிலைப்பாட்டை வலுப்படுத்தவும், வர்த்தக நாம விழிப்புணர்வை மேம்படுத்தவும், அனைத்து தகவல் தொடர்பு வழிகளிலும் ஒருமித்த வர்த்தக நாம செய்தியினை உறுதிப்படுத்தவும் செல்வாக்கு மிக்க வர்த்தக நாம மூலோபாயங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்.
- நிறுவனத்தின் முன்னுரிமைகளுக்கு பயனுள்ள ஆதரவை வழங்கவும், ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்தவும், விற்பனை, தயாரிப்பு மற்றும் ஏனைய முக்கிய துறைகளுடன் நெருங்கிய ஒத்துழைப்பில் ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- சந்தைப்படுத்தல் வரவுசெலவுத் திட்டத்தை திட்டமிட்டு, நிர்வகித்து, கண்காணிப்பதன் மூலம் வளங்களின் சிறந்த பயன்பாடு, செலவுத் திறன் மற்றும் பிரச்சாரங்கள் மற்றும் திட்டங்களின் முதலீட்டு வருவாய் அதிகபட்சமாக கிடைப்பதை உறுதிசெய்தல்.
- சந்தை ஆய்வுகள், பகுப்பாய்வுகள் மற்றும் செயல்திறன் அளவுகோல்களைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளின் விளைவுகளை மதிப்பீடு செய்து, மூலோபாயங்களை மேம்படுத்தி, தகவல் அடிப்படையிலான முடிவுகளை எடுக்க வழிவகுத்தல்.
- சந்தைப்படுத்தல் செயல்திறன், முக்கிய முயற்சிகள் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகள் தொடர்பான விரிவான அறிக்கைகள், மூலோபாய நுண்ணறிவுகள் மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய பரிந்துரைகளை சிரேஷ்ட நிர்வாகத்திற்கு வழங்குதல்.
- முடிவுகளை நோக்கிய மற்றும் புதுமையை ஊக்குவிக்கும் பண்பாட்டை உருவாக்கும் வகையில் சந்தைப்படுத்தல் குழுவிற்கு தலைமைத்துவமும் வழிகாட்டுதலும் வழங்குதல்.

**தகைமைகள்**

**உள்ளக மற்றும் வெளி அபேட்சகர்களுக்கு (கீழுள்ள 1 அல்லது 2):**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/ வர்த்தக முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது நிறுவனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் 'முகாமைத்துவ தரத்தில்' குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம், அதில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. பதவியின் விடயப் பரப்புக்கு தொடர்புடைய (SLIM, CIM) அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை "பட்டய நிறுவன" அமைப்பு ஒன்றில் சக அங்கத்துவம் மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது நிறுவனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் 'முகாமைத்துவ தரத்தில்' குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம், அதில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு:** அடிப்படைச் சம்பளம்: 150,000.00, வாழ்க்கைச் செலவு: 25,000.00, தொழில்முறை கொடுப்பனவு: 75,000.00, செயல்திறன் கொடுப்பனவு: 100,000.00, போக்குவரத்துக் கொடுப்பனவு: 100,000.00, தொடர்பாடல் கொடுப்பனவு: 3,750.00 மற்றும் மாதம் ஒன்றுக்கு 135 லீற்றர் எரிபொருள் ஒதுக்கீட்டுக்கு உரித்தாகும்.

நியமனத்தின் தன்மை: EPF மற்றும் ETF இற்கான தகைமையுடன் வருடாந்தம் புதுப்பிக்கக் கூடியாதாக ஐந்து (05) ஆண்டுகள் ஒப்பந்தம்.

### 4. சிரேஷ்ட முகாமையாளர் - சட்டம்

**பணிப் பெறுப்பு**

- தகவலறிந்த முடிவெடுப்பை ஆதரிக்கும் வகையில், பணிப்பாளர் சபை, தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட நிர்வாகத்தினருக்கு செயற்பாட்டு, ஒப்பந்த, ஒழுங்குமுறை மற்றும் நல்லாட்சி தொடர்பான விடயங்களில் நிபுணத்துவ சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.
- நிறுவனச் சட்டம், தொழிலாளர் சட்டம், அரச பெறுகை விதிமுறைகள், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஏனைய அரசாங்க ஒழுங்குமுறைகள் உள்ளிட்ட பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுடன் இணக்கத்தை மேற்பார்வையிடுதல்.
- வழங்கல் ஒப்பந்தங்கள், சேவை ஒப்பந்தங்கள், குத்தகை ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பல்வேறு சட்ட ஆவணங்களைத் தயாரித்து, பரிசீலித்து மற்றும் பேச்சுவார்த்தை நடத்தி, அவற்றின் சட்டபூர்வத் தன்மையையும் அபாயக் குறைப்பையும் உறுதிசெய்தல்.
- உள்நாட்டு பங்குதாரர்கள் மற்றும் வெளிப்புற சட்ட ஆலோசகர்களுடன் ஒருங்கிணைந்து, அனைத்து வழக்குகள் மற்றும் சட்டத் மோதல்களை கையாள்வதுடன், நீதிமன்ற நடவடிக்கைகளையும் நிர்வகித்தல்.
- தொழிலாளர் சட்டங்கள் மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளுக்கு இணங்க, தவறான நடத்தை, மோசடி மற்றும் பணியாளர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான உள்நாட்டு விசாரணைகளுக்கு சட்ட மதிப்பாய்வுகளை மேற்கொண்டு ஆதரவு வழங்குதல்.
- நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய சட்ட அபாயங்களை அடையாளம் கண்டு, தடுப்பு நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதுடன், சட்டக் கொள்கைகள், நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளை உருவாக்கி புதுப்பித்தல்.
- சொத்து குத்தகைகள், நில உரிமைகள் மற்றும் சொத்து ஆவணங்கள் தொடர்பான சட்ட விவகாரங்களை மேற்பார்வையிடுவதுடன், நிறுவனத்தின் அறிவுசார் சொத்துரிமைகளின் பாதுகாப்பு மற்றும் பதிவை உறுதிசெய்தல்.
- லங்கா சதொச லிமிடெட்டின் சட்டப் பிரிவுக்கு தலைமை தாங்கி, ஒழுங்குமுறை அமைப்புகள், கணக்காய்வாளர்கள், அமைச்சுகள் மற்றும் சட்ட அமுலாக்க அமைப்புகளுடன் நிறுவனத்தின் சட்டத் தொடர்பு அதிகாரியாகச் செயல்பட்டு, சட்ட அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிசெய்தல்.

**தகைமைகள்**

**உள்ளக மற்றும் வெளி அபேட்சகர்களுக்கு (கீழுள்ள 1):**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்டத் துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்ட (முதுமாணி) தகைமையுடன் சட்டத்தரணி ஒருவர் மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள I அல்லது II)**

I. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கான தகைமையை பெற்றிருத்தல்.

II. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் முகாமைத்துவ பிரிவு (MM) தரம் I பதவி ஒன்றில் குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது :** 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளக் குறியீடு மற்றும் அளவு:** (சம்பள குறியீடு HM 1-1-2025 மற்றும் சம்பள அளவு ரூபா 140,640/= - 15 x ரூபா 4,100/= - ரூபா 202,140/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு:** அடிப்படைச் சம்பளம்: 123,019.00, வாழ்க்கைச் செலவு: 17,800.00, தொழில்முறை கொடுப்பனவு: 25,000.00, போக்குவரத்துக் கொடுப்பனவு: 50,000.00, தொடர்பாடல் கொடுப்பனவு: 2,000.00, மற்றும் மாதம் ஒன்றுக்கு 115 லீற்றர் எரிபொருள் ஒதுக்கீட்டுக்கு உரித்தாகும்.

**நியமனத்தின் தன்மை:** EPF மற்றும் ETF இற்கான தகைமையுடன் வருடாந்தம் புதுப்பிக்கக் கூடியாதாக ஐந்து (05) ஆண்டுகள் ஒப்பந்தம்.

### 5. சிரேஷ்ட முகாமையாளர் - பெறுகை

**பணிப் பெறுப்பு**

- லங்கா சதொச லிமிடெட் நிறுவனத்தின் அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை திறமையான, செலவுச்சிக்கனமான மற்றும் காலத்துக்குத் தக்க முறையில் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் மூலோபாய பெறுகை கொள்கைகள் மற்றும் பிரிவு அடிப்படையில் கொள்முதல் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.
- நம்பகமான வழங்குநர்களுடன் வலுவான கூட்டாண்மைகளை உருவாக்கி, பேச்சுவார்த்தை நடத்தி, பராமரிப்பதுடன், தரம், விநியோகம் மற்றும் இணக்கப்பாடு தரநிலைகளை பின்பற்றுகிறார்களா என்பதை உறுதிசெய்ய அவர்களின் செயல்திறனை கண்காணித்தல்.
- அரசாங்க பெறுகை விதிமுறைகளுக்கு ஏற்ப கேள்விமனுக்கள், ஏல மதிப்பீடுகள், ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் மற்றும் ஆவணப்படுத்தல் ஆகியவற்றை நிர்வகித்து, பெறுகை செயல்முறையில் வெளிப்படைத்தன்மை, போட்டித்தன்மை மற்றும் இணக்கத்தை உறுதிசெய்தல்.
- பெறுகை அதிகாரிகள், களஞ்சிய பணியாளர்கள் மற்றும் விற்பனை நிலைய குழுக்களுடன் இணைந்து தேவையை துல்லியமாக கணித்து, அதிக கையிருப்பு மற்றும் கையிருப்பு பற்றாக்குறை இரண்டையும் குறைத்து, தொடர்ச்சியாக பங்கு கிடைப்பை உறுதிசெய்தல்.
- ஆண்டு பெறுகை வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்து, செலவினங்களை கண்காணித்து, சந்தை பகுப்பாய்வு, வழங்குநர் ஒருங்கிணைப்பு மற்றும் மூலோபாய பெறுகை வழியாக செலவுக் குறைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- பொது நிதி விதிமுறைகள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு தேவைகளுக்கு கடுமையாக இணங்குவதுடன், அனைத்து கட்டங்களிலும் நெறிமுறைபூர்வமான பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்தல்.
- பெறுகைக் குழுவுக்கு தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டுதலை வழங்கி, செயல்திறன் மதிப்பீடுகளை மேற்கொண்டு, பெறுகை திறன்களை வலுப்படுத்த திறன் மேம்பாட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

**தகைமைகள்**

**உள்ளக மற்றும் வெளி அபேட்சகர்களுக்கு (கீழுள்ள 1 அல்லது 2):**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ வர்த்தக முகாமைத்துவம்/ வணிகம்/ வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம்/ சர்வதேச வர்த்தகம்/ வர்த்தக நிர்வாகம்/ ஏற்பாட்டியல் முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவம் மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள I அல்லது II)**

I. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கான தகைமையை பெற்றிருத்தல்.

II. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் முகாமைத்துவ பிரிவு (MM) தரம் I பதவி ஒன்றில் குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளக் குறியீடு மற்றும் அளவு:** (சம்பள குறியீடு HM 1-1-2025 மற்றும் சம்பள அளவு ரூபா 140,640/= - 15 x ரூபா 4,100/= - ரூபா 202,140/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு:** அடிப்படைச் சம்பளம்: 123,019.00, வாழ்க்கைச் செலவு: 17,800.00, தொழில்முறை கொடுப்பனவு: 25,000.00, போக்குவரத்துக் கொடுப்பனவு: 50,000.00, தொடர்பாடல் கொடுப்பனவு: 2,000.00 மற்றும் மாதம் ஒன்றுக்கு 115 லீற்றர் எரிபொருள் ஒதுக்கீட்டுக்கு உரித்தாகும்.

**நியமனத்தின் தன்மை:** EPF மற்றும் ETF இற்கான தகைமையுடன் வருடாந்தம் புதுப்பிக்கக் கூடியாதாக ஐந்து (05) ஆண்டுகள் ஒப்பந்தம்.

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றையும் பெற்றிருத்தல் வேண்டும்:**

- இதனையொத்த திறனில் புகழ்பெற்ற வர்த்தக அல்லது பன்னாட்டு அமைப்பு ஒன்றில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
- அரச நிறுவனத்தில் அனுபவம் இருப்பது கூடுதல் முன்னுரிமையாக கருதப்படும்.
- சிறந்த பகுப்பாய்வு திறன், பிரச்சினை தீர்க்கும் திறன் மற்றும் ஒழுங்கமைப்பு திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ பண்புகள் மற்றும் சிறந்த ஆளிடை / தொடர்பாடல் திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.
- வலுவான தகவல் தொழில்நுட்ப திறன்களை வெளிப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பல்துறை அணிகளை வழிநடத்தி, நிர்வகிக்கும் நிரூபிக்கப்பட்ட திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அனைத்து விண்ணப்பதாரரும்:**

- இலங்கை பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
- பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் திறன்களை பெற்றிருக்கும் அபேட்சகர்கள் தொடர்புடைய கல்வி மற்றும் தொழில்முறை சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து தமது சுயவிபரக்கோவையை 2026 ஜுன் 27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. குறிப்பிடப்பட்ட இறுதித் திகதிக்குள் விண்ணப்பங்களை பிரதி பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம், லங்கா சதொச லிமிடெட், இல. 27, 4ஆவது மாடி, CWE செயலக கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்று முகவரிக்கு அல்லது vacancies@lankasathosa.org என்ற மின்னஞ்சல் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**லங்கா சதொச லிமிடெட்**
**இல. 27, CWE செயலகக் கட்டடம், வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு - 02.**